**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 53/2023**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 நல்லம்மாள் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் தற்போது ஜெகதாபியில் வசிக்கிறேன். எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தமிழ் மட்டும் ஓரளவுக்கு படிப்பேன். நான் கிரையம் வாங்கிய சொத்து பண்ணைப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் யாரிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. வாதிகள் எதற்காக வழகக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் எனது நிலத்தில் தடம் இருப்பதாக வழக்கு போட்டுள்ளனர். அவ்வாறு எதுவும் இல்லை. எனது சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் வடக்கில் சக்தி ஆறுமும் நிலம் உள்ளது, தெற்கில் வாதிகள் நிலம், மேற்கில் ரோடு, கிழக்கில் யார் நிலம் என ஞாபகமில்லை. எனது நிலத்தை ஒட்டி உள்ள ரோடு மண் ரோடா என்றால், தார் ரோடு ஆகும். மேற்படி ரோடு எங்கு செல்கிறது என்றால் தெரியவில்லை. அது தென்வடல் ரோடு என்றால் சரிதான்.

2) அது கோட்டப்புளிபட்டி – சுக்காம்பட்டி செல்கிறது என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி ரோடு எனது இடத்தை ஒட்டி மேற்குபுறம் உள்ளதா என்றால் ஆமாம். 2022ம் வருடம் பூங்கோதை, சோமசுந்தரம் ஆகியோரிடம் இருந்து நான் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் சர்வே எண் 527/1, 527/2 என்றால் ஞாபகமில்லை. வாதிகள் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. 2, 3 வாதிகளின் நிலம் சர்வே எண் 527/3 என்றால் அதுபற்றி தெரியாது. 1ம் வாதி நிலத்தின் சர்வே எண் 530/3 என்றால் அதுபற்றி தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 ஆவணம் எனது கிரைய பத்திரம் என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்தில் 2 அயிட்ட சொத்துக்களாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதில் மாமூல், தட,

வழி, பாத்தியம் என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அதில் தடம் எதுவும் இல்லை.

3) எனது கிரைய ஆவணத்தில் முத்துசாமி, மாரியப்பன் நிலத்திற்கு மேற்கு என்று கண்டுள்ளது என்றால் தெரியவில்லை. மேற்படி முத்துசாமி, மாரியப்பன் யார் என தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மாரியப்பன்தான் இவ்வழக்கின் 2ம் வாதி என்றால் தெரியவில்லை. பி.சா.ஆ.2 எனது கிரையதாரர்களின் உரிமை ஆவணமா என்றால் அதுபற்றி தெரியவில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் மாமூல், தட, வழி, பாத்தியம் என கண்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி தட, வழி, பாத்தியத்தைத்தான் வாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, அதுபோல் எந்த பாதையும் இல்லை. பி.சா.ஆ.3 எனது நிலத்தின் மூல ஆவணம் என்றால் தெரியவில்லை. மேற்படி ஆவணத்திலும் மாமூல், தட, வழி, பாத்தியம் என்றும், பங்கு விட்டு பங்கு தாண்டி செல்லும் மாமூல் பாதை பாத்தியம் என கண்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

4) பி.சா.ஆ.4 ஆவணம் எனது மூல ஆவணம் என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி ஆவணத்திலும் மாமூல், தட, வழி, பாத்தியம் என கண்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. பி.சா.ஆ.5 ஆவணம் எனது மூல ஆவணம் என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி ஆவணத்திலும் மாமூல், தட, வழி, பாத்தியம் என கண்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. பி.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களிலேயே வாதிகள் பயன்படுத்தி வரும் பாதை குறித்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**